14.09.2022
O.S. 112/2018

D.W.1-Sathiskumar

குு.வி.

இந்த வழக்கிடைச் சொத்தினுடைய 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களுக்கு உண்டான சர்வே எண் தெரியுமா என்றால் மேற்சொன்ன 3 அயிட்டச் சொத்துக்களுக்குமே 981, 982 என்று சர்வே எண் ஆரம்பிக்கிறது. குறிப்பிட்டு எனக்கு தெரியவில்லை. நான் கரூரில் கவுரிபுரத்தில் வசிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கினுடைய 2 வது பிரதிவாதியும் நான் வசிக்கின்ற அதே பகுதியில்தான் வசிக்கிறார் என்றால் கரூரில் வசிக்கிறார் என்று பின்னிட்டு தெரிந்து கொண்டேன். நான் பேருந்து வைத்து திண்டுக்கல்லில் ஓட்டி வருகிறேன். அந்த வகையில் வாதியை எனக்கு தெரியும். என்னுடைய எதிர்உரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ நான் திண்டுக்கல் பஸ் ஓட்டி வருகின்ற காலம் முதல் எனக்கு வாதியை தெரியும் என்று தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியாக ஞாபகமில்லை. வாதியை எனக்கு யார் என்றே தெரியாது, இந்த வழக்கிற்காகவேண்டி உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் எனக்கு முன்பிருந்தே தெரியும். கரூரில் கோவை ரோட்டில் குமரன் காம்ப்ளக்ஸ் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் குமரன் காம்ப்ளக்சில் கரூர் பைனான்ஸ் என்ற பெயரில் முதல் மாடி எண்.150 ல் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்று சொன்னால் எனக்கும் அந்த நிறுவனத்திற்கும் சம்மந்தமில்லை. நான் மேற்சொன்ன காம்ப்ளக்சில் பல பெயர்களில் அதாவது தனம் மோட்டார் பைனான்ஸ், அனுகிரகா பைனான்ஸ், விஷ்ணு ஆட்டோ பைனான்ஸ், பரணி ஆட்டோ பைனான்ஸ், சோனி ஆட்டோ பைனான்ஸ், ஸ்ரீகரன் ஆட்டோ பைனான்ஸ் மற்றும் சத்யா பைனான்ஸ் என்ற அனைத்து நிறுவனங்களையும் நானும், என்னுடன் சேர்ந்த பங்குதாரர்களும் நடத்தி வருகிறோம் என்றால் எனக்கும் அதற்கும் சம்மந்தமில்லை. வேலுச்சாமி மகன் பார்த்தசாரதியை எனக்கு தெரியும் என்று சொன்னால் டாக்டர் கணேசன் என்பவர் மூலமாகத்தான் தெரியும். நான் என்னுடைய எதிர்வழக்கு உரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ டாக்டர் கணேசன் மூலமாகத்தான் எனக்கு பார்த்தசாரதியை தெரியும் என்று தெரிவிக்கவில்லை என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. மேற்சொன்ன விவரமான டாக்டர் கணேசன் என்பவர் மூலமாகத்தான் பார்த்தசாரதியை தெரியும் என்று எதிர்வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ தெரிவிக்கவேயில்லை என்று சொன்னால் என் மீது போடப்பட்ட வழக்கில் நான் கொடுத்திருக்கின்ற பவர் செல்லாது என்றுதான் வழக்குரையில் விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது, நான் அதைப் பொறுத்து தான் வழக்காடுகிறேன். பிராதில் பார்த்தசாரதி சம்மந்தமாக முழு விவரமும்

சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்த பார்த்தசாரதி பற்றி சொல்லப்பட்டுள்ள விவரத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை. என்னுடைய எதிர்வழக்குரையில் பத்தி 5 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்களை மறுத்து நான் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் எனக்கு சம்மந்தமில்லாத காரணத்தினால் நான் தெரிவிக்கவில்லை. நான் போட்டுள்ள நிருபண வாக்குமூலத்திலும் இதுகுறித்து எந்த விவரமும் தெரிவிக்கவில்லை என்றால் எனக்கு சம்மந்தமில்லாத காரணத்தினால் நான் தெரிவிக்கவில்லை. பார்த்தசாரதி கரூர் பைனான்ஸ் நிறுவனத்தினுடைய முகவராகவும்(ஏஜண்ட் ஆகவும்), அதனுடைய பங்குதாரராகவும், திண்டுக்கல்லில் பணியாற்றி வந்தார் என்றால் எனக்கும் அந்த நிதி நிறுவனத்திற்கும் சம்மந்தமில்லை. அதில் அவர் பணியாற்றினாரா என்றால் தெரியாது. கரூர் நிதிநிறுவனத்தில் நான் பங்குதாரராக இருந்துகொண்டு நாளதுவரை நான் பணியாற்றி வருகிறேன் என்றால் மேலே குறிப்பிடப்பட்ட பைனான்ஸ்க்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. பார்த்தசாரதி திண்டுக்கல் ஏரியாவில் ரியல் எஸ்டேட் புரோக்கராகவும் பணியாற்றி வருகிறார் என்றால் டாக்டர் கணேசன் என்பவர் மூலமாக தெரியுமே அன்றி அவர் என்ன பணி செய்கிறார் என்று தெரியாது. டாக்டர் கணேசன் என்பவர் மூலமாக பார்த்தசாரதியை எனக்கு தெரியும் என்று சொல்வது முற்றிலும் தவறு, எனக்கும் டாக்டர் கணேசன் என்பவருக்கும் எந்தவிதமான பழக்கமும் இல்லை என்று சொன்னால் அவர் எனக்கு பவர் கொடுத்திருக்கமாட்டார். டாக்டர் கணேசன் பார்த்தசாரதி மூலம் ஆத்துப்பட்டி பிரிவில் 19 ஏக்கர் 61 செண்ட் நிலத்தை 2 கோடியே 86 லட்சத்திற்கு கிரையம் பேசி பிரபுவிடம் முடிக்கப்பட்டது, அவ்வாறு கிரையப்பத்திரம் பதிவு செய்யும்போது பணம் போதவில்லை என்றால் பணம் கொடுப்பதற்கு ஆதரவாக ஒரு பொது அதிகார ஆவணம் பார்த்தசாரதி தயார் செய்ததில் கையெழுத்து போடவேண்டும் என்று பார்த்தசாரதி கூறினார், அதன் அடிப்படையில்தான் பார்த்தசாரதி என் பெயரில் தயார் செய்யப்பட்ட அதிகார ஆவணத்தினை இனிமேல் பணம் தேவைப்பட்டால் கொடுக்கவேண்டும் என்பதற்காக பார்த்தசாரதியால் என் பெயரில் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விவரங்கள் பிராதில் சொல்லப்பட்டிருக்கின்றபோதும் அந்த விவரங்களை மறுத்து நான் எந்தவிவரமும் சொல்லவில்லை என்று சொன்னால் எங்களுக்கு சம்மந்தமில்லாத விவரம் என்பதால் சொல்லவில்லை. 19 ஏக்கர் 61 செண்ட் பேசப்பட்ட நிலத்தினை முழுமையாக கிரையம் முடிக்க முடியாத நிலை ஏற்பட்டதால் 13 ஏக்கர் 85 செண்ட் நிலம் மட்டும் 31.1.2014 தேதியில் ரூ.1,15,00,000 த்திற்கு கிரையம் செய்யப்பட்டது என்று சொன்னால் அந்த இடத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. மேற்சொன்ன கிரையத் தொகை ரூ.1,15,00,000/- போக மீத கிரைய தொகையான

ரூ.1,35,00,000/- பார்த்தசாரதி வசமே இருந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்து அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட ஆத்துப்பட்டியில் உள்ள 6 ஏக்கர் நிலம் இதில் சேர்க்கப்பட்டிருந்ததால் அதனை கிரையம் செய்ய இயலாது என்ற காரணத்தினால் 6 ஏக்கரைப் பொறுத்து கிரையம் மேற்கொள்ளப்படவில்லை என்று சொன்னால் இந்த இடத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. மேற்கொண்டு பணம் தேவைப்பட்டால் வேண்டும் என்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணத்தினை பயன்படுத்தவேண்டிய சூழலே எழாத காரணத்தினால் அந்த பணம் பயன்படுத்தப் படவே இல்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. எனக்குச் சம்மந்தமில்லை. பார்த்தசாரதிக்கு உதவுவதற்காக சண்முகம் என்ற ஒரு உதவியாளரை பார்த்தசாரதி வைத்திருந்தார், அந்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியாது. பொது அதிகாரபத்திரம் வாதசாஆ.4 யார் வாங்கியது என்றால் கணேசன் வாங்கினார். நான் என்னுடைய எதிர்வழக்குரையிலோ, அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ இந்த பவர் பத்திரத்திற்கான ஆவணங்களை எல்லாம் கணேசன் வாங்கினார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த பத்திரங்களை நானோ, கணேசனோ வாங்கவில்லை என்று சொன்னால் கணேசன் வாங்கி கையொப்பமிட என்னை கூப்பிட்டார். நான் சென்று கையொப்பமிட்டேன். சாசாஆ.2 ல் வாதசாஆ.4 ல் பயன்படுத்தப்பட்ட முதல் முத்திரைத்தாள் என்.சதீஷ்குமார் என்பவர் பேரில் ஆர்.ராணி என்பவர் வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் என் பெயரை பயன்படுத்தி டாக்டர் கணேசன் கூறியதன் பேரில் வாங்கியிருக்கிறார். நான் போய் வாங்கவில்லை. டாக்டர் சென்று வாங்கியதாக முத்திரைத்தாள் வாங்கப்பட்ட விவரங்களில் சொல்லப்பட வில்லை, வழக்கிற்காகவேண்டி நான் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் சென்று பத்திரம் வாங்கப்பட்டது என்றால் நான் சென்று வாங்காததால் தேதி தெரியவில்லை. நான் பைனான்ஸ் நிறுவனங்களில் பங்குதாரராக இருக்கின்ற காரணத்தினால் பத்திரம் வாங்கிய தேதியை குறிப்பிட்டால் நான் பங்குதாரர் என்ற விவரம் வெளியே தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் பைனான்ஸ் நிறுவனத்தின் பங்குதாரரும் அல்ல, நான் சென்று பத்திரமும் வாங்கவில்லை, யார் வாங்கினார்கள் என்பதும் எனக்கு தெரியாது. 11.11.2011 ல் பவர் பத்திரத்தினுடைய முதல் தாள் மட்டும் வாங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பத்திரத்தினை விற்பனை செய்ததன் அடிப்படையில் அதனுடைய சீரியல் நம்பர்கள் 7000 முதல் 7041 வரை சுந்தரி என்பவரால் வாங்கப்பட்டிருக்கிறது, அது சாசாஆ.2 ல் காட்டப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. தொடர் எண்.7000 மற்றும் 7002 பத்திரங்களும் சதாம்

உசேன் பேருக்கு 1.12.2021 தேதியில் விற்பனை செய்யப்பட்ள்ளதாக சாசாஆ.2 ல் விவரம் காணப்படுகிறது என்று சொன்னால் எனக்குத் தெரியாது. இந்த முத்திரை தாள்கள் சாசாஆ.2 ல் கண்டுள்ளவை ரூ.1000 மதிப்புடைய முத்திரைத்தாள்கள் அவை 50 ரூபாய் மதிப்புடைய முத்திரைத்தாள்கள் அல்ல என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதசாஆ.4 ல் 2 மற்றும் 3 ஆக பயன்படுத்தப்பட்டிருக்கின்ற முத்திரைத் தாள்கள் மாவட்ட பதிவாளரால் வழங்கப்பட்ட முத்திரைத்தாள்கள் அல்ல அது விற்பனை செய்யப்பட்ட முத்திரைத்தாளும் அல்ல என்று சொன்னால் அதனை டாக்டர் கணேசன் தயார் செய்து வைத்திருந்தார். அதைப்பற்றி விவரம் எனக்கு தெரியாது. கணேசன் அதனை தயார் செய்து வைத்திருந்தார் என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1.12.2013 தேதியில் விற்பனை செய்யப்பட்ட பத்திரங்களை 15.11.2011 தேதியிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் மருத்துவர் வாங்கி வைத்திருந்தார். நான் சென்று கையெழுத்து போட்டேன். டாக்டரே அதனை வாங்கவில்லை என்னுடைய பைனான்ஸ் நிறுவனத்தில் செய்யப்பட்ட மோசடிவேலை என்று சொன்னால் சரியல்ல. டாக்டர் கணேசன் வாங்கி வைத்திருந்தார் அதில் நான் கையொப்பம் இட்டேன் என்ற விவரத்தினை என்னுடைய எதிர்வழக்குரையிலோ அல்லது என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவே இல்லை என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. வாதசாஆ.4 ல் பயன்படுத்தப்பட்டுள்ள 4 மற்றும் 5 ன் முத்திரைத்தாள்கள் தொடர் எண்கள் 7003 முதல் 7005 ஆவணங்கள் 1.12.2011 தேதியில் சேவியர் ராஜ் என்பவர் பெயரில் விற்பனை செய்யப்பட்ட ஆவணமாகும், அது ரூ.1000 மதிப்புடைய பத்திரம் என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதசாஆ.1 ல் பயன்படுத்தப்பட்ட 4 மற்றும் 5 முத்திரைத் தாள்களில் கண்டுள்ள தொடர் எண்கள் 1000 ரூபாய் மதிப்புடைய முத்திரை தாள்களுக்கு கொடுக்கப்பட்ட எண்ணை 50 ரூபாய் பத்திரத்திற்கு பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. சேவியர் ராஜ் என்பவர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் என்னுடைய பைனான்சின் பங்குதாரர்கள் என்று சொன்னால் தெரியாது. வாதசாஆ.4 ல் பயன்படுத்தப்பட்ட 5 வது முத்திரைத்தாள் தொடர் எண்.7006 க்குண்டானது ஒரு அன்பில்ராணி என்பவர் பெயரில் 1.12.2011 ல் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. அது 1000 ரூபாய் மதிப்புடைய பத்திரம், ஆனால் இந்த வாதசாஆ.4 ல் பயன்படுத்தப்பட்ட 5 வது முத்திரைத்தாள் 50 ரூபாய் பத்திரத்திற்கு உண்டானது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் தொடர் எண் ஆனது ஒரே தேதியில் ஒரே நபரால் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நான்

பார்த்தவகையில் அவ்வாறுதான் காணப்படுகிறது. மேற்சொன்ன தொடர் எண்கள் 7000 முதல் 7006 வரையான பத்திரங்கள் அனைத்தும் 1.12.2011 தேதியில்தான் முத்திரை தாள் விற்பவரால் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. இந்த அனைத்து முத்திரைத்தாள்களுமே கருதணம்பட்டியைச் சேர்ந்த கணேசன் என்ற முத்திரைத்தாள் விற்பவரிடமிருந்து வாங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பார்த்தசாரதி என்ற நபர் மூலமாக இந்த ஆவணம் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. இந்த ஆவணத்தில் 1 வது சாட்சியாக பார்த்தசாரதி கையொப்பமிட்டிருக்கிறார் என்று சொன்னால் கையொப்பமிட்டிருக்கிறார். இந்த வழக்கினுடைய 2 ம் பிரதிவாதி 2 வது சாட்சியாக அதில் கையொப்பமிட்டிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய பெயரில் பைனான்ஸ் கம்பெனிக்காக பார்த்தசாரதி வாதசாஆ.4 ஆவணத்தினை தயார் செய்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி சரியான மதிப்புடைய முத்திரைதாள்கள் இந்த ஆவணத்தில் காணப்படாத காரணத்தினால் சட்டத்தின் பார்வையில் இந்த ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணமல்ல என்றால் எனக்கு தெரியாது. மற்றொருவர் பெயரில் உள்ள முத்திரைதாளினை வேறு ஒரு நபர் பயன்படுத்திக்கொள்வது சட்டப்பூர்வமாக தடை செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் தெரியாது. பார்த்தசாரதி அழைத்ததன் பேரில் மாலை 4-5 மணிக்குள் டாக்டர் கணேசன் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து பார்த்தசாரதி கேட்டுக் கொண்டதன் பேரில் கையொப்பமிட்டு சென்றார், இந்த ஆவணம் யார் பெயரில் எழுதப்பட்டது என்ற விவரம் கூட டாக்டர் கணேசனுக்கு தெரியாது என்றால் சரியல்ல. இந்த பொது அதிகாரம் பதியப்பட்ட அதே நாள் அதே நேரத்தில் 2 ம் பிரதிவாதி பெயரில் ஒரு கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது அது வாதசாஆ.5 என்று சொன்னால் பதியப்பட்டுள்ளது. இந்த கிரைய ஒப்பந்தம் எப்போது எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் டாக்டர் அவருடைய அலுவலகத்தில் வைத்து பேசி முடித்து விட்டுத்தான் என்னை அழைத்தார். 15.11.2011 க்கு ஒரு வாரத்திற்கு முன்னர் டாக்டருடைய அலுவலகத்தில் வைத்து முத்துக்குமார் என்பவர் கிரையம் பேசி முன்பணத்தொகையை பேசி முடித்து 15.11.2011 ல் அட்வான்ஸ் தொகையாக ரூ.5 லட்சத்தை முத்துக்குமார் என்னிடம் கொடுத்து, நான் அதனை டாக்டர் கணேசனிடம் கொடுத்தேன். மீதி பணத்தைக் கொடுப்பதற்கு முத்துக்குமார் டாக்டர் கணேசனிடம் கோரினார். சொத்தினைப் பொறுத்து லீகல் ஒபினியன் காலதாமதம் ஆகும் என்று தெரிவித்ததன் பேரில் டாக்டர் எனக்கு பவர் கொடுத்து முத்துக்குமாருடன் என்னை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளச் சொன்னார். நான் தற்போது நீதிமன்றத்தின்

முன்னிலையில் மேற்சொன்ன விவரங்களைப் பொறுத்து என்னுடைய எதிர் வழக்குரையிலோ அல்லது என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலோ எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை. வாதசாஆ.4 ன் அடிப்படையில் வீண் விவகாரம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு டாக்டர் கணேசனுக்கு தெரியாமல் வாதசாஆ.5 னை 15.11.2011 தேதியில் நான் ஏற்படுத்திக் கொண்டேன் என்று சொன்னால் அது தவறு. இந்த ஒப்பந்தத்திலும் முதல் சாட்சி பார்த்தசாரதி, 2 வது சாட்சி சண்முகம் என்று சொன்னால் சரிதான். இந்த இரண்டு ஆவணங்களையும் தயார் செய்த நபர் மாசாணம் என்கின்ற நபர் என்று சொன்னால் எனக்கு தெரியாது. இந்த அதிகார ஆவணம் ஏற்படுத்திய அன்றே பூர்த்தி செய்யப்படாத வாதசாஆ.12 ல் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களைப் பொறுத்து 2 ம் பிரதிவாதி முத்துக்குமார் கையொப்பமிட்டு ஆவண விவரங்களை இரண்டு அட்டைகளில் எழுதிக்கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதசாஆ.12 ஆவணம் என் முன்னிலையிலும் டாக்டர் கணேசன் முன்னிலையிலும் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம், தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 2 ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வராமல் நான்தான் தடுத்துள்ளேன், அவர் நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மை விவரங்கள் நீதிமன்றத்திற்கு தெரியப்பட்டுவிடும் என்ற காரணத்தினால் தடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த பொது அதிகார பத்திரமே பின்னிட்டு பணம் தேவைப்பட்டால் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற நோக்கத்தில்தான் ஏற்பட்டதே அன்றி இதன் அடிப்படையில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்வதற்கோ, கிரையம் செய்வதற்கோ, கிரையம் செய்யும் நோக்கத்திற்காக ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதசாஆ.4 ஆவணம் ஏற்பட்ட காலத்திலேயே மூல ஆவணங்களையும் பெற்று பைனான்ஸ் நிறுவனத்தினர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அது சம்மந்தப்பட்ட விவரங்களையும் வாதசாஆ.12 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் வாதசாஆ.12 ஐ பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது, என்னிடம்தான் பொது அதிகார ஆவணமும், மூல ஆவணமும் கொடுக்கப்பட்டது. என்னுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ பொது அதிகார பத்திரம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது மூல ஆவணங்களும் என் வசம்தான் ஒப்படைக்கப்பட்டது என்ற விவரத்தை நான் தெரிவிக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கிற்காகவேண்டி நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதசாஆ.4 ல் 2 வது சாட்சியாக கையொப்பமிட்டிருக்கின்ற முத்துக்குமார் பெயரில்தான் வாதசாஆ.5

ஆவணம் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். சொத்தினை சென்று பார்க்காமலேயே ஒரே நேரத்திலேயே பொது அதிகார பத்திரமும், கிரைய ஒப்பந்த பத்திரமும் ஒரே நேரத்தில் 4-5 மணிக்குள் பதியப்பட்டிருக்கிறது என்றால் சொத்தினை நானும் பார்த்திருக்கிறேன், முத்துக்குமாரும் பார்த்திருக்கிறார், டாக்டர்தான் அழைத்துச் சென்றார். கிரையத்திற்கு 4,5 நாட்களுக்கு முன்னர் பார்த்தேன். கிரைய ஒப்பந்த பத்திரம் மற்றும் பொது அதிகார பத்திரம் ஏற்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிரைய சொத்தினை சென்று பார்த்ததாக என்னுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வாதசாஆ.5 ல் ரூ.5 லட்சம் முன்பணமாக கொடுக்கப்பட்டதாய் சொல்லப்பட்டிருப்பது ஒரு பொய்யான கூற்று என்று சொன்னால் சரியல்ல. டாக்டரை ஏமாற்றும் நோக்கத்துடன் வாதசாஆ.5 ஆவணம் பொய்யாக என்னாலும் என்னுடைய நிறுவனத்தாலும் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட பொது அதிகார பத்திரத்திற்காக பயன்படுத்தப்பட்ட முத்திரைத்தாள் சட்டத்தின் பார்வையில் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணமாக இல்லாத காரணத்தினால் அந்த பொது அதிகார பத்திரமும் செல்லாது, அதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரமும் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் தவறு. வாதசாஆ.8 னை நானும் முத்துக்குமாரும் 3.5.2013 தேதியில் அந்த ஆவணத்தினை ரத்து செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரிதான். அதற்குண்டான காரணமாக சொத்தினை 1 வது நபராகிய நான் கிரையம் செய்து கொடுக்க முடியாத சூழல் ஏற்பட்டதால் இந்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்கிறேன் என்ற வாசகம் சொல்லப்பட்டுள்ளது என்றால் லீகல் ஒபினியன்படி ஆவணம் சரியில்லை என்று முத்துக்குமார் தெரிவித்த காரணத்தினால் அந்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுத்தேன். என்னால் எழுதிக்கொடுக்கப்பட்ட ரத்து ஆவணத்தில் நான் மேற்சொன்னவாறு தெரிவித்த "லீகல் ஒபினியன்படி ஆவணம் சரியில்லை என்று முத்துக்குமார் தெரிவித்த காரணத்தினால்" என்பதை பதிவு செய்து அதன் காரணமாக ஒப்பந்தத்தினை ரத்து செய்வதாக எந்த ஒரு வாசகமும் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வாதசாஆ.8 ல் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் 5 லட்ச ரூபாய் முன்பணத்தினை முத்துக்குமாருக்கு நான் கொடுத்ததாகவோ, அவர் பெற்றுக்கொண்டதாகவோ கண்டு எந்த வாசகமும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். உண்மையாகவே ஒரு நபர் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு அது ரத்து செய்யப்பட்டால் ஏற்கனவே பெற்றுக்கொண்ட தொகையை திரும்ப கொடுக்காமல் ரத்து பத்திரம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் முத்துக்குமாரிடம் டாக்டர் கணேசனிடம் பணம் வாங்கி ஒரு வார காலத்தில் கொடுத்துவிடுகிறேன் என்று தெரிவித்த காரணத்தினால் அவர் பணத்தை

கேட்கவில்லை. முத்துக்குமாரிடம் ஒரு வார காலத்திற்குள் டாக்டரிடமிருந்து பணம் பெற்று கொடுத்துவிடுவதாக நான் கூறினேன் என்று தெரிவித்த விவரம் சம்மந்தமாக நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். விவசாய நிலங்களுக்கு மாதாமாதம் அதனுடைய மதிப்பு கூடிக்கொண்டே இருக்கும் என்று சொன்னால் சரி. 6.5.2013 தேதியில் இந்த வழக்கின் 3ம் பிரதிவாதிக்கு ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் டாக்டர் கணேசன் சொல்லித்தான் தான் அந்த ஏற்பாட்டை செய்தேன். டாக்டர் கணேசன் சொல்லித்தான் இந்த ஏற்பாட்டினை நான் செய்தேன் என்ற விவரத்தை என்னுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தேவையில்லாமல் டாக்டர் கணேசனை இழுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஆகிய நான் 3ம் பிரதிவாதி பெயரில் போட்ட கிரைய ஒப்பந்தத்தில் முத்துக்குமார் 1வது சாட்சியாக கையொப்பமிட்டிருக்கிறார். முத்துக்குமாருடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தின்போதும் ரூ.20 லட்சம் கிரைய தொகை, முன்பணம் ரூ.5 லட்சம் என்று கண்டு எழுதப்பட்டது, பின்னிட்டு கார்த்திகேயன் என்பவருடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்ததிலும் அதே கிரைய தொகை ரூ.20 லட்சம் என்றும், கிரைய முன்பணம் ரூ.5 லட்சம் என்றும் 2 வருடங்கள் சென்று அதே தொகை கண்டு ஆவணம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் டாக்டர் கணேசனிடம் பேசி அவர்கள் இருவரும் அதே தொகைக்கு ஒப்புக்கொண்ட காரணத்தினால் அதே தொகைக்கு எழுதப்பட்டது. கணேசன் சொல்லியதன் பேரில்தான் மீண்டும் கார்த்திகேயனிடம் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதாக என்னுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். கார்த்திகேயனுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தினை 13.8.2014ல் ரத்து செய்து கொண்டேன் அது வாதசாஆ.10 என்று சொன்னால் அதுவும் லீகல் ஒபினியன்படி ஒரு பகுதி சொத்து குறைவாக இருப்பதாக குறிப்பிட்ட காரணத்தினால் ஒப்பந்தத்தினை ரத்து செய்து கொண்டோம். லீகல் ஒபினியன்படி சொத்து குறைவாக காணப்பட்ட காரணத்தினால்தான் ஒப்பந்தத்தினை ரத்து செய்தேன் என்று கண்டு ஆவணம் ரத்து செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வாதசாஆ.10ல் ஆவணம் ரத்து செய்வதற்குரிய காரணங்களாக சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நான் சொத்தினை கிரையம் செய்ய விரும்பவில்லை, 3ம் பிரதிவாதி சொத்தினை கிரையம் பெற பணமில்லை என்றும் காரணங்கள் சொல்லி ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதர். இந்த ஆவணத்திலும் ஒப்பந்த

தொகையை திரும்ப கொடுக்கப்பட்டதாக எந்த விவரமும் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தமும் சரி, ரத்து செய்யப்பட்ட பத்திரமும் சரி சட்டப்படி ஏற்கத்தக்க ஆவணங்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

V R LATHA Digitally signed by V R LATHA Date: 2022.09.14 17:45:40 +0530

Prl.District Judge,
Dindigul.